ராணி
காமிக்ஸ்
ஜானி
துப்பறியும்
இரகசியப் பயணம்
ரூ. 3

எல்ஐசி
என்றால்
பாதுகாப்பு



துள்ளி வரும் பந்து, உங்கள் மேல் எகிறும்போது, கையுறைகள் கைகளை மட்டுமே பாதுகாக்கிறது. ஆனால் லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா அதாவது எல். ஐ. சி. வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறது. எல். ஐ. சி. பாலிசி என்றால் என்ன என உங்கள் பெற்றோரிடம் கேளுங்கள். அது உங்களை எப்படி பத்திரமாக பாதுகாக்கிறது என அவர்கள் விளக்குவார்கள். ஏனெனில், எல். ஐ. சி. உங்கள் மீது அக்கறை கொண்டுள்ளது.

லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

காப்பீடு செய்யுங்கள். பாதுகாப்பு பெறுங்கள்.

ராணி காமிக்ஸ் – 301
(மாதம் இருமுறை இதழ்)
TV
ஜனவரி 1 – 15
1997

ஜானி
தோன்றும்

இரகசியப் பயணம்

வட ஆப்பிரிக்க விமான நிலையத்தில் விங்கமாண்டர் ஜானி இருந்தார்.
மிஸ்டர் ஆல்பா! என் உதவி தேவைப்படுகிறதா? மிக்க மகிழ்ச்சி!
அப்படியானால் நான் இங்கிருந்து புறப்பட எனக்கு ஒரு விமானம் தேவை!
ஜானி! உடனே விமானத்தை அனுப்பி வைக்கிறேன்!
விமான மீட்புப் பிரிவுக்கு அவசர அழைப்பு!
அடுத்த சில நிமிடங்களில்—
ஜானி! சிறிது நேரத்தில் விமானம் வந்துவிடும்! நீ என்ன செய்ய வேண்டும் என்றால்...?
சொல்லுங்கள் ஆல்பா!
சிக்கலான பிரச்சினையை தீர்க்கவேண்டிய பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! அது நம் அரசாலோ, ரஷியாவாலோ தீர்க்கமுடியாத பெரும் பிரச்சினை!
அப்படியா?
ரஷியாவின் விமானம் ஒன்று சீனாவை நோக்கி தப்பிச் சென்று விட்டது!
ரஷிய விமானம் சீனாவுக்குள் நுழைந்து விட்டதா? எதற்காக?

தேசத் துரோகி பைலட் பணத்துக்காக இந்த காரியத்தைச் செய்திருக்கிறான்!
மங்கோலியாவின் மலைப் பிரதேசம் வழியாக விமானம், ஓசை எழுப்பாமல், தரையை ஒட்டியபடியே பறந்திருக்கிறது.
ரஷியா, சீனா ரேடார் கருவிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சீனாவுக்குள் நுழைந்துவிட்டது! ஆனால்...!
அது சென்று அடைய வேண்டிய இடத்துக்குச் செல்லமுடியாமல் இடையூறு ஏறபட்டுவிட்டதா?
சரியாகச் சொன்னாய் ஜானி!
எப்பேர்பட்ட தாக்குதலுக்கும் ஈடுகொடுக்கும் அந்த விமானம் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கலால் பறக்கமுடியாமல் வீழ்ந்துவிட்டது!
அதற்கு காரணம் ஒரு மங்கோலிய வேட்டைக்காரன்!

வேட்டைக்காரனா? என்ன சொல்கிறீர்கள்!
உண்மை ஜானி!
விமானம் வருவதை அறியாத அந்த வேட்டைக்காரன், தூரத்தில் கூட்டமாய் இருந்த வாத்துக் கூட்டத்தை நோக்கி சுட்டிருக்கிறான்!
அவன் சுட்ட குண்டுச் சத்தத்தில் வாத்துக்கள் கூட்டமாய் மேலே பறக்கத் தொடங்கியது.
விசயத்துக்கு வராமல் ஏதோ கதை சொல்கிறீர்களே?
அவசரப் படாதே ஜானி!
தாழ்வாக பறந்து வந்த மிக்–27 விமானம் அந்த வாத்துக் கூட்டத்துக்குள் நுழைந்தது.
விமானத்தில் காற்றை உள் இழுக்கும் குழாய் வழியாக வாத்துக்குள் உறிஞ்சி உள் இழுக்க, விமானம் பழுதடைந்துவிட்டது!

ஒரு சாதாரண வேட்டைக்காரனின் துப்பாக்கிக் குண்டு, ஒரு விமானத்தையே வீழ்த்திவிட்டது.
ரஷியாவின் போர் விமானத்தை என் துபபாக்கி பறக்கவிடாமல் செய்துவிட்டதே!
அந்த விமானம் தரையோடு தரையாக உராய்ந்து சென்று மணலில் புதைந்துவிட்டது.
சரி! நமக்கும் அந்த விமானத்துக்கும் என்ன சம்பந்தம்?
சார்... நீங்கள் அனுப்பிய விமானம் வந்துவிட்டது!
சரி, விமானத்தில் ஏறு! பயணத்தின் போது மீதியை சொல்கிறேன்!
நண்பனே! விமானத்தை கிளப்பு!
ஜானியை ஏற்றிக்கொண்ட விமானம் பறந்தது.
நமது இரகசிய அலைவரிசையுடன் தொடர்பு கொடு!
மிஸ்டர் ஆல்பா! உம்... சொல்லுங்கள்!
அந்த ரஷிய விமானம் இப்போது சினாவில் தரை இறங்கியிருக்கிறது!
அந்த விமானம் சினர்களின் கையில் சிக்காமல் இருக்கவே உன்னை அனுப்புகிறேன்!

ஜானி! எந்த நோக்கத்துடன் அந்த விமானம் எல்லைக்குள் புகுந்ததோ அதை நிறை வேற்றாமல் தடுக்க வேண்டும்!
அந்த முயற்சியில் ரஷியாவிற்கு உதவ தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் குழுவில் நீயும் ஒருவன்!
மிக் விமானத்தை மீட்க வேண்டும் அவ்வளவுதானே?
முக்கியமாக அதன் எலக்ட்ரானிக் மூளையாய் இருக்கும் அந்தக் கருவி சீனர்களின் கையில் சிக்கிவிடக்கூடாது!
அந்தக் கருவியை மட்டும் தூக்கி வந்தால் போதுமா?
முடியாவிட்டால் அங்கேயே அதனை அழித்தும் விடலாம் ஜானி!
தன் நாட்டு இரகசியம் சீனாவிடம் சிக்கிவிடக்கூடாது என்பதில் ரஷியா முனைப்பாக இருக்கிறது!
இதில் முக்கியமானது என்ன வென்றால் அந்த மங்கோலிய வேட்டைக்காரன் ரஷிய நாட்டின் உளவாளி!
விமானியின் உடலை புதைத்தது போல இந்த விமானத்தையும் புதைத்து வைத்தால் நல்லது!
7

ஜானியின் விமானம் பால்கன் கடற் கரையில் பறந்தது. கீழே விமானம் தாங்கிக் கப்பல்.
ஜானி! இந்த வேலை வெற்றியுடன் முடிய வேண்டும்!
ஆல்பா! நாம் ரஷியர்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டும். அப்படித்தானே?
சினாவிற்குள் எப்படியும் ஊடுருவிச் செல்ல வேண்டும்!
விமானம் கப்பலின்மேல் இறங்குகிறது! அங்கே ஒரு விமானம் நிற்கிறதே!
அது ரஷிய விமானம்!
அந்த விமானத்தில் ரஷிய உளவுத்துறையைச் சேர்ந்த இவானோ தகவல் தருவார்!
சினாவுக்குள் நுழைய உனக்கு உதவி செய்வார்!
நிச்சயம் வெற்றியுடன் செய்துமுடிக்கிறேன்!
ஜானியின் விமானம் கப்பலில் இறங்கியது.
இந்த வேலையை ரஷியர்கள் தனித்துச் செய்ய முடியாது!
இவானோல் ஜானியை சந்தித்தார்.
நண்பர் ஜானி! நாம் இணைந்து பணியாற்ற வேண்டும்!

உங்கள் குழுவினர் ஏற்கனவே தயாராக இருக்கி றார்கள்!
இது மிஸ் மோனிகா! பாரிசைச் சேர்ந்தவள். கம்ப்யூட்டர் தொழிலில் கைதேர்ந்தவள்!
ஜானி! உங்களுடன் பணியாற்று வதில் மகிழ்ச்சி!
இவர் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஐசக்! வெடி குண்டுகளை வெடிக்கவைப்பதில் திறமைசாலி!
அது என் முழுநேரத் தொழில்!
இதோ இதுதான் மிக்–27 விமானம்!
இந்த விமானத்தின் எலக்ட்ரானிக் மூளைதான் முதல் குறி!
இநத் வரைபடத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்!
ஏன் என்றால் இந்த வரைபடத்தை நீங்கள் கையோடு எடுத்துச் செல்ல முடியாது!

இந்த வரைபடத்தை புரிந்துகொள்ளாமல் யாராலும் விமானத்தில் உள்ள எலக்ட்ரானிக் மூளையை அதிலிருந்து அகற்ற முடியாது!
ஏன் அப்படி?
விமானத்தின் அமைப்பே மூடு மந்திரம்தான்!
ஜானி! நீங்கள் விமானத்தை அடைந்ததும் மோனிகாவும், ஐசக்கும் அந்த எலக்ட்ரானிக் மூளை அமைப்பை பத்திரமாக அகற்று வார்கள்!
சரி, இவானோல்! விமானத்தை எப்படி சென்று அடைவது?
ஆமாம் அதுதானே?
ஆள் நடமாட்டம் இல்லாத மத்திய சீனப் பகுதியில்தான் அந்த விமான்ம் கிடப்பதாக உளவாளி கூறுகிறார்!
சீன ரேடார்களின் கண்காணிப்பிலிருந்து விமானம் தப்பிப்பது நம் யோகம்தான்!

அதைப்போல நீங்களும் இரகசியமாக ரேடார்களின் கண்ணில்படாமல் சிலாவுக்குள் நுழைய மாற்று திட்டம் இருக்கிறது!
"நாங்கள் இறுதியாக விண்ணில் செலுத்திய சோயுங் என்ற விண்கல வீரர்களின் உதவியோடு நீங்கள் செயல்படலாம்."
தரை கட்டுப்பாட்டிலிருந்து ஏதோ சங்கேதச் செய்தி வருகிறது!
CCCP
என்னவாக இருக்கும்?
சோயுங் விண்கலத்தில்—
என்ன செய்தி வந்திருக்கிறது!
நமது பயணத்தை தொடராமல் சின எல்லைக்குள் தரை இறங்க வேண்டும்!
முட்டாள் தனமான உத்தரவாக இருக்கிறது!
எப்படியும் நாம் சினாவில் தரை இறங்கியே ஆகவேண்டும்!

அதே நேரம்—
விண்கலம் சீனாவுக்குள் தரை இறங்க பொய்யான காரணம் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டுமல்லவா?
ஆமாம் ஜானி!
விமான மீட்புப் பணியில் சீனாவையும் பங்கேற்க வைக்கப் போகிறோம்! நீங்கள் அவர்கள் முன்னாலேயே சீனாவுக்குள் நுழைவீர்கள்!
நீங்கள் சோயுங் விண்கலத்தை மீட்டு வரச்செல்லும் ரஷியக் குழுவினர்!
அருமையான திட்டம் இவானோல்!
சீனாவுக்குள் நுழைவதற்காக விண்கலனையே தரை இறங்கச் செய்யும் அளவுக்கு அருமையாக திட்டம் திட்டி இருக்கிறீர்கள்!
ஆனால்... ஒரு சின்ன விசயத்தை கவனிக்க தவறிவீட்டீர்கள்!
அப்படி எதுவும் இருக்காது ஜானி!

ஒருவேளை காணாமல் போன மிக் விமானம் சீனர்கள் பார்வையில் பட்டிருந்தால்...!
நிச்சயமாக இருக்காது! அப்படி எதுவும் என்றால் மங்கோலிய உளவாளி உடனே எங்களுக்கு தகவல் அனுப்பியிருப்பான்!
முதலில் விமானத்தை கூடாரம் அமைத்து அதற்குள் மறைக்கவேண்டும்!
கூடாரம் எழுப்பப்பட்டது.
ஏதோ நாடோடிக் கும்பல் கூடாரம் அமைத்திருக்கிறது என்று நினைத்துப்போய் விடுவார்கள்!
மாஸ்கோவிற்கு வெளியே அமைந்த விண் ஆராய்ச்சி தரைக்கட்டுப்பாடு நிலையத்தில்—
ஜெனரல்! சோயுஸ் விண்கலம் திரும்பவும் காற்று மண்டலத்துக்குள் நுழைந்துவிட்டது!
சபாஷ்! உடனடியாக சீனாவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொடு!

சினாவுடன் தொடர்பு கிடைத்தது.
அலோ! அவசரச் செய்தி! எங்களது சோயுங் விண்கலத்தில் எந்திரப் பழுது காரணமாக பயணத்தை தொடரமுடிய வில்லை! தரை இறங்கவேண்டிய சூழ்நிலை!
சினாவில்—
உங்கள் சீன நாட்டுக்குள்தான் விண்கலத்தை தரை இறக்க வேண்டிய திருக்கிறது!
இக்கட்டான சுழ்நிலையில் மாட்டியிருக்கிறீர்கள்!
ஆமாம்! எங்களது மீட்பு விமானம் அந்த விண்கலனை அப்புறப்படுத்தி வருவதற்கு அனுமதி கேட்கிறோம்!
நல்லெண்ண ஒத்துழைப்பு தர நாங்கள் தயாராக இருக்கிறோம்!
எங்கள் விமானம் சீன எல்லையை அடைந்ததும் தகவல் கொடுக்கிறோம்!
எங்களது ரேடாரே அதை கவனித்துக் கொள்ளும்!
ரஷிய விமானம் தாங்கிக் கப்பலில்—
மீட்புக் குழுவினரே! வெற்றி! நீங்கள் உடனே புறப்பட்டுச் செல்லலாம்!

ஜானியின் மீட்புக்குழு புறப்பட்டது.
சோயுங் விண்கலத்தை மீட்க இந்த கெலிகாப்டர்! ஆனால்!
அதன் அடியில் இருக்கும் கிளைடர் விமானம் எதற்கு?
சத்தமே இல்லாமல் நீங்கள் சீனப்பகுதிக்குள் நுழையவேண்டாமா?"
ஓகோ...!
கெலிகாப்டர் சீன எல்லையை நெருங்கும்போது ரேடருக்கு எட்டாத தூரத்தில் இந்த கிளைடர் விமானம் தனித்து விடப்பட்டு விடும்!
நாங்கள் மிகவும் தாழ்வாகப் பறந்து மிக் விமானத்து அருகே இறங்க வேண்டும்!
சரியாகச் சொன்னாய் ஜானி!
கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது ! ஆனால், எந்திரம் இல்லாத கிளைடர் விமானத்தில் நாங்கள் எப்படித் திரும்புவது?

அவசரப்படாதே ஜானி! கிளைடரின் உள்ளே வந்து பார்!
தரை பயணத்திற்காக உருவாக்கப்பட்ட ஜீப்!
மலைப்பாதையில் ஓட்டிவருவதற்கு ஜீப்தான் வசதி!
சரி ஜானி நீங்கள் மூவரும் கிளைடர் விமானத்தில் ஏறிக்கொள்ளுங்கள்!
விமான மீட்புக்குழுவினர் தன் சாகசப் பயணத்தை தெடங்கினர்.
ரஷியர்களின் விமானத்தை தேடி கண்டுபிடிக்க வேண்டும்!
அதன் இரகசிய எலெக்ட்ரானிக் சாதனத்தை கழற்றி எடுக்கவேண்டும்!
அதை திரும்பவும் ரஷ்யர்கள் கையில் ஒப்படைக்க எனக்கு மனம் வரவில்லை!
ஐசக்! நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலையில் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கிடையாது!

விமானத்தில் இருந்து எலெக்ட்ரானிக் அமைப்பை கழற்றுவதோடு சீனர்களின் கையிலும் சிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்!
எனக்கு அதில் உடன்பாடில்லை!
ஐசக் என்ன சொல்கிறாய்?
சீனர்களிடம் சிக்கக்கூடாது சரி! ஆனால் திரும்பவும் ரஷியர்களிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்!
ஐசக்! அதை வைத்து என்ன செய்யப் போகிறாய்?
நம் 'நேட்டோ' கூட்டமைப்பு அந்த சாதனத்தின் இரகசிய அமைப்பை கண்டறிய வேண்டும்!
20
ஐசக்! நமக்கிடப்பட்ட உத்தரவுப்படி எலெக்ட்ரானிக் அமைப்பை எடுத்து ரஷியர்களிடம் ஒப்படைத்து விடுவதுதான் நல்லது!
நாம் சீனா எல்லையை நெருங்கிவிட்டோம்! அவர்களுடன் தொடர்பு கொள்வோம்!
சீன நண்பர்களே நாங்கள் ரஷியாவின் பிரத்யோக மீட்புப் பணிக்குழுவினர்!

சீனப்பகுதி ரேடார் நிலையத்தில்
சோயுங் விண்கலத்தை கொண்டு செல்ல உங்கள் பகுதிக்குள் நுழைந்திருக் கிறோம்!
புரிந்து கொண்டோம். அதே திசையில் செல்லவும்!
கெலிகாப்டர்— கிளைடர் இரண்டுக்குமிடையே பேசினார்கள்.
தாயிடமிருந்து சேயிக்குச் செய்தி! தனியே புறப்படத் தயாராகவும்!
ஓ.கே!
சீன ரேடருக்கு டிமிக்கிக் கொடுத்து நாம் விரைந்து கீழே இறங்கவேண்டும்!
கெலிகாப்டரின் பிடி விடுபட கிளைடர் வேகமாக கீழே. இறங்கியது!
ரேடாரின் பார்வையில் இருந்து தப்பிக்க வேண்டும்!
ஆனால்—
ரஷிய விமானப் புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளி பிரிகிறதே!
ரஷிய நண்பர்களே! மூன்றாவது புள்ளி ரேடாரில் தெரிகிறதே! அது என்ன?

விமானத்தில் தேவையற்ற வெற்று சிலிண்டர் கழற்றிவிடப் பட்டிருக்கிறது!
அப்படியா?
மீட்புகுழுவினரை அழைத்துச் செல்ல வரும் விமானங்களின் பார்வையில் படாதவாறு கீழே செல்ல வேண்டும்!
ஜாட் மலைத் தொடரை கடக்க முடியுமா?
தட்பவெப்ப நிலையைப் பார்க்கும்போது மலையை கடக்க நமக்கு அதிருஷ்டம் இருக்கிறது!
எவன் பஞ்சு மேகங்களுக்கு கீழே கிளைடர் விமானம் மறையும் அதேநேரம் சீன பாதுகாப்பு விமானங்கள் அங்கே வந்தன.
ரஷிய நண்பர்களே! எங்கள் துணையை ஏற்றுக் கொள்ளுங்கள்!
உங்களுடைய சோயுங் விண்கலத்துக்கு அழைத்துச் செல்கிறோம்.
ரொம்ப நன்றி.

அதேநேரம் சீனப் பகுதி மங்கோலிய ஏரி ஒன்றில் ரஷிய விண்கலம் உதவியை நாடி காத்திருந்தது.
CCCP
சிறிது நேரத்தில் மீட்புக் குழுவினர் அங்கே வந்தார்கள்.
அதோ நம்மை மீட்க மீட்பு குழுவினர் வந்து விட்டார்கள்!
சீனாவின் பாதுகாப்பு விமானங்கள் பார்த்துக்கொண் டிருக்க— மீட்புப் பணி வீரர்கள் கெலிகாப்டரில் இருந்து இறக்கிவிடப்பட்டனர்.
அதேசமயம்— ஜானியின் விமானம் மிக்—27 இருக்கும் இடத்தை நெருங்கியது.
வெட்டவெளியில் இருக்கும் கூடாரம் என்று இவானோ கூறினாரே!
அதோ கூடாரம்! அதன் உள்ளேதான் மிக்—27 விமானம் இருக்கும்!
மங்கோலிய உளவாளி, ஜானியின் விமானத்துக்கு வழிகாட்டிச் சென்றான்.
ஏரியில்— விண்கலத்தின் மீட்புப் பணி நடந்துகொண்டிருந்தது.

தென்திசையில்— ஜானியின் விமானம் கூடாரத்தின் அருகே தரை இறங்கியது.
தரை இறங்கிவிட்டோம்! இனி விரைவாக வேலையைத் தொடங்க வேண்டியதுதான்!
கிளைடர் விமானத்தில் இருந்து ஜீப்பை வெளியே இறக்கினார்கள்.
இனி இந்த ஜீப்புதான் நமக்குத் துணை!
ஜானி மங்கோலிய உளவாளியை சந்தித்தார். அவனது பேச்சை மோனிகா மொழிபெயர்த்துக் கூறினாள்.
கூடாரத்துக்குள்தான் மிக் விமானம் இருக்கிறது!
அனைவரும் கூடாரத்துக்குள் வந்தார்கள்.
அதோ விமானம் தரையோடு தரையாய் பதிந்துகிடக்கிறது பாருங்கள்!
ஜானி அந்த விமானம் உறங்கும் வெடி குண்டு!
அதன் எலக்ட்ரானிக் சாதனத்தை கழற்றும் முறையில் தவறு ஏற்பட்டுவிட்டால், அது வெடிப்பது உறுதி!
வெடிகுண்டு நிபுணர்கள் ஐசக்கும், மோனிகா இருவரும் விமானத்தின் எலக்ட்ரானிக் சாதனத்தை கழற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

நாம் பார்த்த வரைபடத்தின்படி அந்த சாதனம் இந்த இடத்தில்தான் இருக்க் வேண்டும்!
மோனிகா! இதுதான் முதலாவது பாதுகாப்பு அமைப்பு!
அப்படித் தான் நானும் நினைக்கிறேன்!
இதன் செயல்முறையை தடுத்துவிட்டால், மற்றவையை சிக்கலில்லாமல் சமாளித்து விடலாம்!
அந்த எலக்ட்ரானிக் சாதன அமைப்பின் தகடு கவனமாக கழற்றப்பட்டது.
ஆமாம் இதில் துண்டிக்கப்பட வேண்டிய வயர் சிவப்பா? நீலமா?
நீலநிறந்தான்! எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது!
உனக்குப் பிடித்த நிறத்தை சொல்லிவிட்டால் ஆபத்தில் போய் முடிந்துவிடும்!
ரஷியர்களுக்கு சிவப்புதான் பிடித்த நிறம்!
இல்லை ஐசக்! வரைபடத்தில் குறிப்பிட்டிருந்தது நீல வயர்தான்!

உடனே வயரை துண்டித்துவிடு!
நீயும் என்னைப் போல் நினைவில் இருப்பதை வைத்துத்தான் சொல்கிறாய்!
ஐசக் நீலநிற வயரை துண்டித்தார்.
இதோ துண்டித்து விட்டேன்! நீலநிற வயர்தான் இச்சாதனத்தின் தடுப்புக் கருவி!
ஐசக்! என் நினைவாற்றலில் இப்போதாவது நம்பிக்கை இருக்கிறதா? இனி நான் சொல்கிறபடி செய்!
ஓ.கே.! வெற்றி. உனக்கே! உன்னோடு இனி விவாதிக்கக் கூடாது!
இது இரண்டாவது பாதுகாப்புப் பொறி! என்ன செய்வது?
வாழ்வா சாவா என்ற பிரச்சினையில் மோனிகாவின் வார்த்தைதான் நமது தலையெழுத்தை நிர்ணயிக்க வேண்டும் போலிருக்கிறது!
மோனிகாவின் மேற்பார்வையில் மீதமிருந்த பாதுகாப்புப் பொறிகளும் செயலிழக்கச் செய்யப்பட்டன.
ஐசக்! இனி இந்த மூடியை கழற்றலாம்!
கழற்றிவிடு கிறேன்!

ஆகா! எலக்ட்ரானிக் அமைப்பை நெருங்கி விட்டோம்!
மோனிகா! நீயே இதன் வயர்களை கழற்று!
ஜானி! பயம் தேவையில்லை! இவளே இந்த அமைப்பை உருவாக்கியிருக்கிறவள் போல செயல் படுகிறாளே!
ஐசக்! அவள் ரஷியக்காரி அல்ல! பிரெஞ் சுக்காரி!
இதோ வெற்றிகரமாக முடித்துவிட்டேன்!
கம்ப்யூட்டர் போல இதுவும் சிக்கலான சாதனம் போலிருக்கிறது!
அதனால்தான் பிறர் கையில் சிக்கிவிடக் கூடாது என ரஷியர்கள் நினைக்கிறார்கள்!
ஜானியும் ஐசக்கும் அந்த சாதனத்தை தூக்கி வந்தார்கள்.
இது சீனர்களின் கையில் கிடைத்தால், உலக ராணுவத்தின் பலம் பாதிக்கப்படலாம்!
அப்படியானால் அதை நாமே செய்துவிடலாமே?
ரஷியாவிடம் ஒப்படைக் காமல் நேட்டோவிடம் ஒப்படைக்கலாம் என்கிறாயா?
இதுபற்றி நாம் எந்த முடிவுக்கும் வரவேண்டாம்!

அது உன் முடிவு ஜானி! அதில் எனக்கு உடன்பாடில்லை!
இருவரும் என் முடிவுக்கு வாருங்கள்! இல்லை சீனர்களிடம் அகப்பட்டுக்கொள்ளாதீர்கள்!
ஐசக்! எங்கள் துணை இல்லாமல் உன்னால் தனித்து செல்ல முடியாது!
சரி ஏறுங்கள்! மேற்கு நோக்கி செல்வோம்!
மோனிகா துப்பாக்கியை எடுத்தாள்.
இந்த சாதனம் ரஷியர் களிடம்தான் போய்ச் சேர வேண்டும்!
என்ன மோனிகா! உன் பிரெஞ்சு உச்சரிப்பு திடீரென்று மாறிவிட்டது!
ஜானி! இனி நான் நடிக்கத் தேவையில்லை! என் பெயர் இரினா! ரஷியாவின் இரட்டை உளவாளி!

நான் விங் ஏஜண்ட் மோனிகா அல்ல! ஐசக்! நம் திட்டத்துக்கு ஒத்துப்போக வேண்டும்!
அப்படி ஒத்துப் போனால் நான் பழைய மோனிகாவாக நடந்து கொள்வேன்! ஜானி! அருகே வராதே!
இரினா! அவசரப் படாதே!
திடீரென்று ஐசக் இரினாவின் துப்பாக்கியை தட்டிவிட்டான்.
ஜானி! எனக்கு உன் திட்டம் சரிப்படாது!
விலகிச்செல்லுங்கள்! நான் இதை நேட்டோவிடம் ஒப்படைக்கப் போகிறேன்!
ஐசக் அவர்களை விட்டு விட்டு ஜீப்பில் ஏறினான்.
ஐசக்! போகாதே!
உன்னால் தனித்து வெற்றி காணமுடியாது!
அவனை நான் தடுத்து நிறுத்துகிறேன்!

இரினா கீழே கிடந்த துப்பாக்கியை எடுத்தாள்.
இரினா! நம் ஒற்றுமை அதற்குள் உடைய வேண்டாம்!
33
ஐசக்கைப் போல நீயும் முட்டாள் தனமாக செயல்படாதே! அவனைத் தடுக்க இது வழியல்ல!
இரினாவின் துணைக்கு மங்கோலியாவின் உளவாளி அங்கு இருப்பதை ஜானி கவனிக்கவில்லை!
அதற்குள் அந்த மங்கோலியன் இரினாவின் உத்தரவை செயல்படுத்திவிட்டான்.
டுமீல்...!
டுமீல்...!
அவன் சுட்ட குண்டு ஜீப்பில் படவில்லை. ஆனால் பதட்டத்தில் ஜீப் தாறுமாறாக ஓடி தடாலென்று கவிழ்ந்தது.
ஐசக்...! ஐசக்...!
ஜானி ஓடிவந்து பார்வையிட்டார்.

இரினா! நீயும் மங்கோலியனும் சேர்ந்து ஐசக்கை கொன்று விட்டீர்கள்!
இல்லை! நம்மை ஏமாற்ற நினைத்து அவனே கவிழ்ந்துபோனான்!
ஐசக்குக்கு உயிர் இருக்கிறது. ஜீப்பை தூக்குங்கள்! அவனை வெளியே எடுக்கலாம்.
அவசியமில்லை ஜானி!
ஜானி! நான் சொல்வதைக் கேள்!
ஜானி! இங்கிருந்து இரண்டு நாள் பயணம் செய்தால் அல்டாய் குன்று வரும். அதில் நேட்டோவுடன் தொடர்புகொள்ள உனக்கு வாய்ப்பு கிடைக்கும்!
ஜானி! அவன் உன் காதில் என்ன இரகசியம் சொன்னான்?

வாழ்க தேச ஒற்றுமை என்று மட்டும் சொன்னான்!
பொய் சொல்லாதே!
அவன் சொன்னதைத்தான் சொன்னேன்! இவனை அடக்கம் செய்ய வேண்டும். கொஞ்சம் உதவி செய்!
இரினா அதற்கு ஒத்துக்கொள்ளாததால் ஜானியே ஐசக்கை அடக்கம் செய்தார்.
நண்பனே! அமைதி கொள்!
இரினா! சீனர்களிடம சிக்கிவிடுவோம் என்று பயம் கொள்ளாதே! வா புறப்படுவோம்!
ஜானி! இனி நாம இந்த இடத்தைவிட்டு புறப்பட முடியாது!

மங்கோலியன் சுட்டதில் ஜீப்பில் இருந்த பெட்ரோல் கேனில் துவாரம் விழுந்து, பெட்ரோல் காலியாகி விட்டது!
ஜீப்பின் பிரதான டேங்கிலும் பெட்ரோல் குறைவாகத்தான் இருக்கிறது!
இரினா! சீனாவைவிட்டு வெளியேற இன்னும் ஒரு வழியிருக்கிறது!
எப்படி? கிளைடர் விமானம் மூலமாகவா?
தரையைவிட்டு கிளைடரை எப்படி மேலே கிளப்புவது?
உன் மங்கோலிய தோழனுக்கு கொஞ்சம் மூளை இருந்தால் காரியம் கைகூடும்!
அவனால் எப்படி உதவ முடியும்!
நம்மிடமுள்ள கம்பிகளால் கிளைடரோடு இணைத்து— இழுத்து வேகத்தை அவன் உண்டாக்கினால், முடியும்!

அவனால் எப்படி குதிரையால் இழுக்க முடியும்!
குதிரை தேவையில்லை!
இதோ ஜீப்பில் சிறிது பெட்ரோல் இருக்கிறது!
ஜீப்பில் கட்டி இழுத்தால் கிளைடர்மேல் எழும்புவது உறுதி!
இங்கு வீசும் பலத்த காற்றும் நமக்கு சாதகமாக இருக்கும்!
மங்கோலியன் நாகரீகமற்றவன்! அவனுக்கு ஜீப் ஓட்டத் தெரியாது!
அவனை நாம் மாற்றிவிடலாம்!
ஜானி அவனுக்கு ஜீப் ஓட்டக் கற்றுக்கொடுத்தார்.
கியரை நீயுட்ரலில் போடு! வண்டியை எடு! கியரை மாற்று!
அய்யோ... பிரேக் போடு!
குதிரைக்கு கடிவாளம் இருப்பது போல ஸ்டிரிங்கை பின்னோக்கி இழுத்தால் வண்டி நிற்காது!
ஜீப் தாறுமாறாக ஓடியது.

இரினா! இவன் திறமையை வைத்துத்தான் நம் தலையெழுத்து அமையும்!
ஜானி ஜீப்பை நிறுத்தி அந்த எலக்ட்ரானிக் சாதனத்தை தூக்கிக்கொண்டு கிளைடர் விமானத்துக்கு வந்தார்.
இரினா! உன் மங்கோலிய வீரனிடம் தயாராக இருக்கச் சொல்!
நாம் போகலாம் என்று சொன்னபிறகே ஜீப்பை கிளப்ப வேண்டும் என்று சொல்!
எல்லாம் நல்லபடியாக நடந்தால் நாம் பிழைக்கலாம்!
ஓ.கே. இரினா! இறுக்கமாக பிடித்துக் கொள்!

போகலாம்! போகலாம்!
ஜீப் புறப்பட்டதும் கிளைடரும் புறப்பட்டது.
அம்மாடி! இன்னொரு முறை இப்படி குலுங்கினால் கம்பிகள் முறிந்துவிடும்!
மங்கோலியன் சுதாரித்துக்கொண்டு ஜீப்பை நிதானமாக ஓட்டினான்.
கிளைடர் விமானமும் உயரே கிளம்பியது.
இரினா! மேலே பறக்கத் தொடங்கியாச்சி! இனி கம்பிகளை கழற்றிவிட வேண்டும்!
ஜானி கம்பிகளை விடுவித்தார்.
ஒருவழியாக கிளைடர் விமானத்தை பறக்கச் செய்து விட்டோம்!
ஆனால் ஜானி கழற்றிவிட்ட கம்பி ஜீப்பில் இருந்த மங்கோலியன் முகத்தில் மோதியது.
!!

மங்கோலியன் தாக்கப்பட்டதும் ஜீப் அருகில் இருந்த பள்ளத்துக்குள் செங்குத்தாய் விழுந்தது.
அய்யோ...!
இரினா! ஐசக்கை அனுப்பிய இடத்துக்கே அவனும் சென்று விட்டான!
ஜானி! இப்பொழுது உனக்கு மகிழ்ச்சிதானே!
ஐசக் மரணத்தின் போது நீ வருத்தப் படவில்லையே?
முதலில் ஐசக் கூறியது போல நேட்டோவுடன் தொடர்புகொள்ள வேண்டும்!
சீனாவை தாண்டும்வரை நம் விருப்பு வெறுப்புகளை தள்ளிவைப்போம்! நமக்கு இன்னும் அபாயம் நீங்கவில்லை!
அபாயம் ஒன்றல்ல, இரண்டு! ஒன்று குன்றுகள் வடிவத்தில்...!
இரண்டாவது?

எலக்ட்ரானிக் கருவியை யாரிடம் ஒப்படைப்பது என்பதில் நீ இருக்கும் பிடிவாதம்!
ரஷியாவுக்குத்தான் அதற்கு முழுப் பங்கு உண்டு!
அதில் இன்னும் சந்தேகமா?
CCCP
அதை தீர்மானிக்கும் உரிமை எனக்குக் கிடையாது! முதலில் தப்பிக்க வழியைப் பார்ப்போம்!
ஐசக் குறிப்பிட்ட திசையில் கிளைடரை பறக்கவிடுவோம்!
சீன எல்லை அதிக தொலைவில் இருக்கிறது! ஆனால் வேறு ஒரு குறுக்குப் பாதை இருக்கிறது!
உன் விருப்பப்பட்ட இடத்துக்கு போக நினைக்கிறாய்! அது நடக்காது! பேசாமல் வடக்கு திசையில் விமானத்தை செலுத்து!
மறுத்தால் என்ன செய்வாய்?

என்னை சுட்டால் நீ எப்படி எல்லையைக் கடப்பாய்?
எலக்ட்ரானிக் தொழில்நுட்பத்தில் நீ பெரிய அறிவாளியாக இருக்கலாம்! ஆனால் உனக்கு கிளைடர் விமானத்தை ஓட்டத் தெரியாதே!
அதனால், எந்த திசையில் செல்ல வேண்டும் என்பது என் விருப்பப்படி தான் நடக்கும்!
ஜானி! இப்போதைக்கு நீ வென்று விட்டாய்!
கவலைப்படாதே! இந்த பயணத்தில் உன் பங்கு என்னவென்று சொல்கிறேன்!
ஐசக் இறக்கும்போது கூறிய தகவல்படி சீனக் குன்று கோவிலை நாம் அடைய வேண்டும்!
இரினா! எந்தக் குன்றிலாவது பழமையான கோவில் தெரிகிறதா என்று பார்த்து வா!

சினக் கோவிலை பார்த்தபிறகு...!
கிளைடரை அங்கே இறக்க வேண்டும்!
பிறகு நேட்டோவின் ஆளுக்காக காத்திருக்க வேண்டும்! சினர்களின் பிடியிலும் நாம் சிக்கக்கூடாது!
ஏன் அங்கு காத்திருக்க வேண்டும்?
நாம் ஜீப்பில் வந்தால் இரண்டு நாள் ஆகும்!
ஆனால் நாம் 1½ நாளுக்கு முன் விமானத்தில் வந்துவிட்டோம்
ஆனால் நாம் அங்கு காத்திருப்பது ஆபத்தாயிற்றே?
வேறு வழியில்லை 1½ நாள் நாம் வானில் பறந்துகொண்டிருக்கவும் முடியாதே?
அதோ... அதோ...!
இதோ நீ குறிப்பிட்ட பழமையான கோவில்!

நல்லது! அங்கே கிளைடரை தரை இறக்க சமவெளியை பார்க்க வேண்டும்!
திடீரென்று—
கீழே இருந்து சிலர் கிளைடரை துப்பாக்கியால் சுட்டார்கள்.
சீன வீரர்கள் நம்மை பார்த்துவிட்டார்கள்! கண்ட்ரோல் வயர் குண்டுகளால் அறுந்து விட்டது!
நாம் தரை இறங்கவேண்டுமானால் கீழே குதிக்க வேண்டியதுதான்! உம்... குதி!
வந்து... வந்து...!
இதைத் தவிர வேறு வழியில்லை!
ஆனால்...!
இருவரும் விமானத்தில் இருந்து குதித்தார்கள்.
அந்த எலக்ட்ரானிக் கருவியை விமானத்திலேயே விட்டுவிட்டோமே...?

நாம்பட்ட துன்பங்கள் பயனற்றுப் போய்விட்டது!
விலைமதிப்பில்லாத அந்த சாதனத் துடன் கிளைடர் விமானம் தரையை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்தது.
அய்யோ...! மிக்–27 விமானத்தின் எலக்ட்ரானிக் சாதனம் நிரந்தரமாக மறைந்துவிட்டதே!
இது எனக்கு வெற்றி! உன் ரஷிய நாட்டினர் கையில் இது சிக்காது! நேட்டோவின் கையிலும் சிக்கவில்லை!
கீழே இருந்து வரும் குண்டுகள் நம்மை எப்பொழுதும் தாக்கலாம்!
ஆனால் அதிருஷ்டவசமாக மேகமூட்டம் அவர்களை மறைத்தது.

இரினா! உன்னை பார்க்க முடியவில்லை! பேசு!
நமக்கு கீழே என்னதான் காத்திருக்கிறது?
கூரியமுனைகள் கொண்ட குன்றுகள் இருக்கும்! நம்மை கொல்ல சீன வீரர்களும் தயாராக இருப்பார்கள்!
நாம் சீன கோவிலைக் கண்டுவிட்டோம்! நாம் தரை இறங்கும் இடத்தில் இருந்து அரை மைல் தொலைவில் தான் இருக்கும்!
இரினா! எங்கே இருக்கிறாய்?
இங்கே... இங்கே...!
இரினா என்ன ஆச்சு?
மலைமுகட்டில் பாராசூட் சிக்கிக் கொண்டது!

இரினா! அப்படியே தொங்கிக்கொண்டு இரு! நான் வந்து மீட்கிறேன்!
ஆனால்— சினப் படை வீரர்கள் அவர்களை நெருங்கினார்கள்.
மேகமூட்டம் மறைத்துக்கொண்டதால் அவர்கள் நம் கண்ணில் தட்டுப்பட வில்லை
எப்படியும் அவர்கள் அருகில்தான் இருக்க வேண்டும்!
ஜானி இரினாவை காப்பாற்றப் போனார்.
ஜானி! என்னை அம்போவென்று விட்டுவிடாதே!
இரினா! எனக்கு மனிதாபிமானம் இருக்கிறது! சீனர்களிடம் உன்னை ஒப்படைக்க மாட்டேன். பயப்படாதே!
ஜானி இரினாவை விடுவிக்கும் முயற்சியில் இருந்தார். அப்போது—
ஜானி... ஜானி...
சீனர்கள் வந்துவிட்டார்கள்!
சின வீரர்கள் அவர்களை தேடிக்கொண்டு வந்தார்கள்.

சினர்கள் தரையிலேயே அவர்களைத் தேடினார்கள்.
அதோ ஒரு பாராசூட்! அருகில்தான் அவர்கள் இருக்க வேண்டும்!
ஜானி இரினாவை மேலே தூக்கினார்.
நாலாபுறமும் பிரிந்து தேடுங்கள்!
இரினா வா! நாம் எதிர்த்திசையில் செல்வோம்!
அவர்கள் வருவதற்குள் நாம் சினக் கோவிலுக்குள் சென்றுவிடலாம்!
அங்கே போனதும்...!
மறைந்து காத்திருக்க வேண்டும்!
நேட்டோவின் உதவியை எதிர் பார்த்து $1\frac{1}{2}$ நாள் காத்து இருப்பதா?
ஐசக் கூறியபடி நம்மை மீட்பதற் கான ஏற்பாடு, அது!

இரினா! அதோ சீனக் கோவில்!
நாளை மதியம் வரை இந்த சீனக் கோவிலில்தான் பொழுதை கழிக்க வேண்டும்!
இருவரும் கோவிலை அடைந்தார்கள்.
இரினா! எதற்கும் என் பின்னே வா! உள்ளே எதிரிகள் இருக்கக் கூடும்!
கோவிலில் யாரும் வந்து போனதாகத் தெரியவில்லையே!
கோவில் மயானம் போல வெறிச்சோடிக் கிடக்கிறதே!
அதற்காக கோவில் நமக்கு சொந்தமாகி விடாது!
இரினா! அங்கே ஒரு மனிதர் இருக்கிறார் பார்!
ஏய்... அசையாதே!

உடம்பில் அசைவே இல்லையே! ஒருவேளை செவிடாக இருக்குமோ?
ஏதோ சாமியார் போலத் தெரிகிறது! அவரது மொழியில் பேசிப் பாரேன்!
முயற்சிக்கிறேன்!
ஜானி! இவர் செவிடு அல்ல! முழுக் குருடு!
மவுன விரதத்தில் இருக்கிறாரோ!
இவரால் நமக்கு ஆபத்து எதுவும் இல்லை!
ஆனால் நமக்கு நேட்டோவின் உதவி கிடைக்கும் வரை இவரை கண்காணிக்க வேண்டும்!

இரினா! நீ சிறிது நேரம் ஓய்வு எடு! நான் வெளியே கண் காணித்து வருகிறேன்!
திடீரென்று ஜானி குரல் கொடுத்தார்.
இரினா! மறைந்துகொள்! சீனப் படை இங்கே வருகிறது!
இங்கு வந்துவிட்டால் ஆபத்து! அந்த சாமியாரையும் அவர்கள் பார்த்துவிடக்கூடும்!
அவரிடம் சென்று விசயத்தைச் சொல்! இது மவுன விரதம் இருக்கவேண்டிய நேரமல்ல!
மவுனத்தை கலைக்க வில்லையென்றால் இவரை எமலோகத்துக்கு அனுப்பவேண்டியது தான்!
?

திடீரென்று அவர் சைகையில் பேசினார்.
ஜானி! அவர் நம்மை அருகே அழைக்கிறார்!
இவரிடம் உதவி கிடைக்குமா?
அவர் அமர்ந்திருந்த இடத்துக்கு கீழே ஏதோ கதவு காணப்படுகிறதே!
ஆமாம்! கைப்பிடி இருக்கிறது!
ஜானி அதைத் திறந்தார்.
அட... இரகசிய படிக்கட்டு!
இவர் நம்பிக்கைக்கு உரியவர்தானா?
ஜானி! வா. சிக்கிரம் கீழே செல்வோம்!
ஒருவேளை இது ஏமாற்று வேலையாக இருந்தால்...!
அப்படியானால் இவர் ஏன் நமக்கு இந்த இரகசிய வழியை காட்ட வேண்டும்?
நாம் கீழே இறங்கி தம்மை பாதுகாத்துக் கொள்வதே புத்தி சாலித்தனம்!
சரி! பார்த்து இறங்கு!

இவர் எதற்காக நமக்கு உதவுகிறார் என்று தெரியவில்லை!
இருவரும் கீழே இறங்கியதும் அவர் கதவை மூடினார்.
இரினா!.நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்!
நம்மை உள்ளே தள்ளி பூட்டிவிட்டார்!
தன் இராணுவத்திடம் நம்மை பிடித்துக் கொடுக்கப் போகிறார்!
அதனால் அவருக்கு தகுந்த வெகுமதி கிடைக்கக்கூடும்!

அதேநேரம் மேலே— சீனர்கள் கோவிலுக்குள் வந்தார்கள்.
காலடி சத்தம் கேட்கிறது! சீனர்கள் உள்ளே நுழைந்துவிட்டார்கள். சாமியார் நம்மை காட்டிக்கொடுக்கப் போகிறார்!
சாமியாரே! வெளிநாட்டுக் காரர்கள் இங்கே வந்தார்களா? சொல்லுங்கள்!
இங்கே—
சாமியார் இன்னும் மவுனமாகவே இருக்கிறார்!
நாம் உயிர் பிழைப்பது அவர் கையில்தான் இருக்கிறது!
இவருக்கு பார்வை யில்லை! பிறகு எப்படி அவர்களை பார்த்திருக்க முடியும்?
அது எனக்குத் தெரியும்!
ஆனால் இவரால் பேசமுடியும். கேட்கமுடியும்!
உம்... சொல்! இங்கே யாராவது வந்தார்களா?

தலைவரே! மவுன விரதம் இருப்பவர்கள் மரணத்தைப் பற்றி பயம்கொள்ள மாட்டார்கள்!
நாமே அவர்களை தேடிப் பார்ப் போம்!
கீழே நிலவறையில்—
இரினா! சாமியார் நம்மை காட்டிக் கொடுக்கவில்லை!
உண்மையிலேயே அவர் மகான்தான். நாம்தான் அவரை தவறாக எண்ணிவிட்டோம்!
எங்கு தேடியும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.
பெரியவரே! மவுனத்தின் மூலம் இங்கு யாரும் இல்லை என்பதை சொல்லி விட்டீர்கள்!
ஆனால் அவர்களை எப்படியும் கண்டுபிடித்துவிடுவோம்!
சீனர்கள் வெளியே போனதும்—
உம்... வெளியே வாருங்கள்!
?!

இரினா! இவர்தான் பேசியிருக்கிறார்!
ஆமாம் இவரேதான்!
ஆபத்தை பொருட்படுத்தாமல் எங்களை எதற்காக பாதுகாத்தீர்கள்?
நண்பரே! எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறதா?
?
இவரது பேச்சைக் கேட்டால் அமெரிக்கர் போலத் தெரிகிறதே!
நடந்தவைகளுக்கு மன்னிக்க வேண்டுகிறேன்!
சாமியார் முகமூடியைக் கழற்றினார்.
என் பெயர் கிரீம்! உங்களுக்காகவே இங்கே காத்திருந்தேன்!
நீங்கள் நேட்டோவைச் சேர்ந்தவர் தானே?

நாங்கள்தானே உங்களுக்காக காத்திருக்க வேண்டும்!
நடக்கப்போவதை யூகித்தே நான் முன்கூட்டியே இங்கு வந்துவிட்டேன்!
அதுசரி! அந்த எலக்ட்ரானிக் கருவி என்னாயிற்று?
அதோ அந்த பனி ஏரியில் எங்கள் கிளைடர் விமானத் துடன் அதுவும் சேர்ந்து மூழ்கி விட்டது!
எவர் கையிலும் சிக்காமல் ஏரிக்குள் மூழ்கியதற்கு நன்றி!
நேட்டோ முயற்சி வெற்றி பெற்றுவிட்டது!
ஆமாம்! அந்தக் கருவியை எத்தனை பாடுபட்டும் கொண்டுவர முடியவில்லை!
முக்கியமாக அந்தக் கருவி ரஷியர்களிடமோ சீனர்களிடமோ சிக்கவில்லை!
இது எனக்கு பெரிய தோல்வி!

இரினா! நீ உயிருடன் இருப்பது அதிருஷ்டம்தான்! ஐசக் நம்மைவிட்டுப் போனதற்கு இவள்தான் காரணம்!
ஐசக் ஏன் இந்த சாதனத்தை கொண்டுவர முடியவில்லை?
அது யாருக்குச் சொந்தம் என்பதில் இரினா மாறுபட்டிருந்தாள்!
ஆனால் ஐசக்கை கொன்றுதான் அதனைச் சாதிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை!
இப்போது நாம் மூவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்! இல்லாவிட்டால் சீனாவைவிட்டு வெளியேற முடியாது!
ஜானி! அவள் சொல்வது சரிதான். நாம் ஒற்றுமையுடன் இருந்தால் வெற்றியுடன் திரும்பலாம்!
ஜானி! இங்கே பார்த்தாயா?
என்ன இது?
நைலான் பலூனில் காற்று ஏற்றும் கருவி!

நாம் பலூனில் தப்பிச் செல்ல முடியுமா?
நிச்சயமாக! இப்போது இருக்கும் காற்றுமண்டலம் நம்மை இந்திய எல்லையில் சேர்க்கும்!
சினர்களின் கண்ணில் படாமலும், ரோந்துப் படை விமானங்களின் பார்வையில் இருந்தும் நம்மால் பலூனில் தப்பிக்க முடியுமா?
நேச நாடுகள் ஆயிரம் மைல் தொலைவில் இருக் கின்றன! இந்த பலூன் வேகமாகவும் செல்லாது!
யாரும் பார்க்காத நேரம் புறப்பட்டால் தப்பிவிடலாம்!
முதலில் இந்த பலூனை வெளியே கொண்டு செல்வோம்!
நம்மில் ஒருவர் கண்காணிப்பில் இருக்க வேண்டும்! ஒருவேளை சினர்கள் மீண்டும் வரலாம்!
நான் வெளியே காவலுக்கு இருக்கிறேன்!

ஓ.கே. இரினா! எச்சரிக்கையாக இரு!
கிரீம்! நாம் பலூனை உப்பவைத்து பறந்தால் நிச்சயம் யார் கண்ணிலாவது படக்கூடும்!
அதற்காகவே நாம் இருட்டியபிறகுதான் புறப்படப் போகிறோம்!
இரினாவை நாம் சந்தேகிக்க வேண்டாம்! ஏன் என்றால் அவள் கழுத்துக்கும் சேர்த்துத்தான் கத்தி!
மூவரும் இருளின் வரவுக்காக காத்திருந்தார்கள்.
சிறிது நேரத்தில் சூரியன் மறைந்து, இருள் பரவியது.
பலூனில் காற்று ஏற்றலாம்!

சீக்கிரம்! மலைச்சரிவில் ஏதோ வெளிச்சம் தெரிகிறது!
சீனர்கள்தான் நம்மைத் தேடி வருவார்கள்!
இனி நம்மை யாராலும் தடுக்க முடியாது! பலூன் தயார். ஓடி வாருங்கள்!
முதலில் பலூனை சீனர்களின் கண்ணில் படாமல் மறைக்க வேண்டும்!
ஜானி! பலூன் தயார்! விரைவாக வாருங்கள்!
இதோ இரினாவை அழைத்து வருகிறேன்!
இரினா! வா பலூன் தயார்! புறப்படலாம்!
ஜானி! உங்கள் பலூனை சீனர்களின் குண்டுகள் துளைக்காமல் தடுப்பது யார்?
அதனால் நீங்கள் இருவரும் புறப்படுங்கள்! நான் சீனர்களை பார்த்துக்கொள்ளுகிறேன்!

ஜானி! நீ புறப்படு. வீணாக உயிரை விடாதே!
ஜானி! நேரம் போகிறது! விரைந்து வா!
இரினா பிடிவாதக்காரி. அவளை என்ன சொல்லியும் அழைத்துவர முடியாது!
சீனர்கள் பலூனை பார்த்தார்கள்.
அதோ அவர்கள் அந்த பலூனில் தப்பிச் செல்ல முயலுகிறார்கள்!
துப்பாக்கியால் சுடுகின்றனரே! மறைந்து கொள்ளுங்கள்!
பலூனை மேலே கிளப்புங்கள்! நான் சீனர்களைத் தடுத்து நிறுத்துகிறேன்! அப்பொழுதுதான் பலூன் துப்பாக்கிக் குண்டுகளில் இருந்து தப்ப முடியும்!
சீன வீரர்களை இரினா சுட்டாள்.

வேறு வழியில்லை! பலூனை கிளப்பு!
பலூன் மேலே கிளம்பியது.
இரினா சீனர்களை முன்னேறவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தாள்.
!
?!
ஜானியும், கிரீமும் யாருக்கும் எட்டாத உயரத்துக்கு மேலே வந்தார்கள்.
இரினாவை இனி நாம் பார்க்க முடியாது!
சீனர்கள் அவளை எப்படியும் கொன்று விடுவார்கள்!
பலூன் எந்த ஆபத்தும் இன்றி வானில் சென்றது.
(முடிந்தது)

தங்கக் கிளி

அமுதா கணேசன்

23

முன்கதை சுருக்கம்:-

சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, எழில்புரி நாட்டு இளவரசி பொற்செல்வியின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்பினான். அவள் மறுக்கவே எழில்புரி நாட்டையே கல்லாக்கி விட்டான். பொற்செல்வி மனம் மாறும்வரை நீ தங்கக்கிளியாக மாறிப்போ என்று சாபமிட்டான். தன்னையும் தன் நாட்டையும் மீட்க ஒரு வீரனைத் தேடி அலைந்தாள். முடிவில் சிங்கபுரி இளவரசன் அஞ்சாநெஞ்சனை கண்டுபிடித்து அவனிடம் உதவி பெற முயன்றாள். அஞ்சாநெஞ்சனும் அவளுக்கு உதவ வந்தான். அதே நேரம், புலிக்கண்ணனும், வில்லாளனும் தங்கக்கிளியை தேடிவந்தார்கள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது.

புலிக்கண்ணன் கோவிலைத் திறந்து கிளிக் கூண்டை கையில் எடுத்துக்கொண்டான்.

இரத்த வெள்ளத்தில் செத்துக்கிடந்த பேயனை பொற்செல்வி பார்த்தாள்.

புலிக்கண்ணன்தான் கொலை செய்து இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டாள்.

மாயக் கம்பளத்தை விரித்தான்.

அதன் மீது அமர்ந்துகொண்டு "பற" என்றான்.

ஆனால், கம்பளம் பறக்கவில்லை.

பேயன் இறந்துவிட்டதால் கம்பளம் தனது வல்லமையை

இழந்துவிட்டது.

புலிக்கண்ணன் மிகவும் எரிச்சல் அடைந்தான்.

அவனது குதிரை அங்கேதான் இருந்தது. அதில் ஏறிக்கொண்டு வேழநாட்டை நோக்கி விரைந்தான்.

இரவு பகலாகப் பயணம் செய்து, புலிக்கண்ணன் வேழநாட்டை அடைந்தான்.

நேராக அரண்மனைக்குச் சென்று அரசன் விந்தனை சந்தித்தான்.

"இதோ தங்கக்கிளி" என்று அரசனிடம் கூண்டைக் காட்டினான்.

தங்கக்கிளியைப் பார்த்து அரசன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான்.

அந்தப்புரத்தில் இருந்த இளவரசி பவளத்தை அழைத்துவர ஆள் அனுப்பினான்!

பவளம் வந்தாள்! தங்கக்கிளியைப் பார்த்ததும் அவளும் தாங்க முடியாத ஆனந்தம் அடைந்தாள்.

"கிளியைக் கொடுங்கள்" என்று ஆவலுடன் கையை நீட்டினாள்.

"முதலில் எனக்கு சேரவேண்டிய பரிசுகளைக் கொடுங்கள்" என்று புலிக்கண்ணன் கேட்டான்.

அவன் மலைநாட்டு இளவரசன் புலிக்கண்ணன் என்பதை அரசர் விந்தன் தெரிந்துகொண்டார். அவன் முரடன் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஏற்கனவே, இளவரசி பவளமும் அவனை வெறுத்துத் தள்ளினாள்.

ஆனால், தங்கக்கிளியைக் கொண்டு வருகிறவனுக்கு, பவளத்தை மணமுடித்துக் கொடுத்து, முடிசூட்டி வைப்பதாக, அரசன் விந்தன் அறிவித்து இருக்கிறார். அந்த வாக்கை நிறைவேற்ற வேண்டிய நிலையில் அவர் இருந்தார். எனவே, திருமணத்துக்கும், அதைத் தொடர்ந்து முடிசூட்டும் விழாவுக்கும் உடனே ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார்.

இளவரசி பொற்செல்வி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருந்தாள். புலிக்கண்ணன் ஒரு கொலைகாரன் என்பதைக் கூற அவள் விரும்பினாள். ஆனால், அவள் வாயைத் திறந்தால், அவள் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவதாக, ஏற்கனவே புலிக்கண்ணன் எச்சரித்து இருந்தான். எனவே, இளவரசி வாயைத் திறக்கவில்லை.

திருமண ஏற்பாடுகள் நடந்தன.

புலிக்கண்ணன் மாப்பிள்ளை போல அலங்காரம் செய்துகொண்டு வந்தான். அவன் கையிலேயே கூண்டு இருந்தது.

பவளத்தையும் அலங்காரம் செய்து தோழிகள் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அரசன் விந்தன் இரு பூமாலைகளுடன் தயாராக நின்றுகொண்டு இருந்தான்.

ஒரு மாலையை புலிக்கண்ணன் கையில் கொடுக்கப் போனான், அரசன்.

அப்போது "நிறுத்துங்கள்" என்று ஒரு குரல் கேட்டது.

எல்லோரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள். ராட்சச கழுகு கீழே இறங்கிக்கொண்டு இருந்தது.

அதன் மீது இருந்து அவசரமாக கீழே குதித்த வில்லாளன் அரசனை நோக்கி, ஓடிவந்தான்.

"அரசே! தங்கக்கிளியைப் பிடித்தது நான்தான். இளவரசி எனக்கே சொந்தம்" என்று வில்லாளன் சொன்னான்.

"தங்கக்கிளியைக் கொண்டுவந்தது நான்தான்" என்று புலிக்கண்ணன் கூண்டை தூக்கிக் காட்டினான்.

"அவன் கூறுவது அத்தனையும் கட்டுக்கதை" என்று புலிக்கண்ணன் அறிவித்தான்.

"எது உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால், என்னிடம் தங்கக்கிளியைக் கொண்டு வந்தது புலிக்கண்ணன்தான். எனவே, பரிசு அவனுக்கே உரியது" என்று அரசன் சொன்னான்.

உண்மையை நிலைநாட்ட ஆதாரம் இல்லாமல் வலலாளன தவித்தான்.

அவனைப் பார்க்க இளவரசி பொற்செல்விக்குப் பரிதாபமாக இருந்தது.

மேலும், இப்பொழுது உண்மையைச் சொல்ல அவளுக்கு தைரியமும் ஏற்பட்டது. எனவே, அவள் பேசினாள்.

"அரசே! வில்லாளன் சொல்வதுதான் உண்மை" என்று பொற்செல்வி சொன்னாள்.

"பேசாதே! உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று புலிக்கண்ணன் கத்தினான்.

ஆனால், பொற்செல்வி பயப்படவில்லை. "வில்லாளன்தான் என்னைப் பிடித்து இந்தக் கூண்டில் அடைத்தார். உடனே அவரை ஏமாற்றிவிட்டு, புலிக்கண்ணன் மாயக் கம்பளத்தில் ஏறி பறந்து வந்துவிட்டான். அதுமட்டும் அல்ல; தனக்கு மாயக் கம்பளம் கொடுத்து உதவிய மந்திரவாதி பேயனையும் இவன் கொலை செய்துவிட்டான்" என்று தெரிவித்தாள்.

"அந்தக் கொலைகாரனைப் பிடியுங்கள்" என்று அரசன் ஆணையிட்டான்.

புலிக்கண்ணன் வாளை உருவினான். வீரர்களிடம் போரிட்டுக் கொண்டே நகர்ந்து சென்றான்.

'திடீர்' என்று தனது குதிரை மீது ஏறிக்கொண்டு ஓடத் தொடங்கினான்.

அதே நேரம், தனது வில்லை வளைத்து வில்லாளன் ஒரு அம்பை விடுத்தான்.

குறி தவறாமல் புலிக்கண்ணன் மீது அம்பு பாய்ந்தது.

"ஆ!" என்று அலறிக்கொண்டே, குதிரையில் இருந்து கீழே விழுந்து செத்தான் புலிக்கண்ணன்.

அவன் கையில் இருந்த கிளிக்கூண்டு கீழே விழுந்தது.

வில்லாளன் ஓடிச்சென்று கூண்டை எடுத்துக்கொண்டான். கூண்டுடன் அரசனிடம் வில்லாளன் திரும்பி வந்தான்.

அப்பொழுதே பவளத்துக்கும் வில்லாளனுக்கும் திருமணம் நடந்தது.

வேழ நாட்டின் வேந்தனாகவும் வில்லாளனுக்கு அரசன் விந்தன் முடிசூட்டி வைத்தான்.

(தொடரும்)

ராணி சின்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

புத்திசாலி ஆமை

—பேராசிரியர் எ. சோதி

காட்டில் நரி ஒன்று இருந்தது. 'என்னைப் போன்று அறிவுக்கூர்மை யாருக்கு உள்ளது? நான்தான் பிறரை ஏமாற்றுவேன். என்னை ஏமாற்ற யார் இருக்கிறார்கள்?' என்று தற்பெருமை கொண்டிருந்தது நரி.

ஒருநாள் நரி காட்டில் உணவு தேடி அலைந்தது. எங்கும் உணவு கிடைக்கவில்லை. பசியுடன் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது.

சிறிது தொலைவில் ஆமை ஒன்று இருந்ததை நரி பார்த்தது. அந்த ஆமை மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருந்தது.

பசிக்கு உணவு கிடைத்தது என்று நரி மகிழ்ந்தது. ஓடிச் சென்று ஆமையைப் பிடித்தது.

தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு திடுக்கிட்டது ஆமை. தன் கால்களையும் தலையையும் ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டது.

நரியோ அந்த ஆமை ஓட்டை உருட்டிப் பார்த்தது. 'ஓட்டிற்கு உள்ளே ஆமை இருக்கிறது. அதை எப்படி உண்பது? வழி தெரியவில்லையே' என்று குழம்பியது, நரி.

ஆமை ஓட்டை உடைக்க முயற்சி செய்தது நரி. அதன் மீது ஏறி நின்று வலிமை கொண்ட மட்டும் குதித்தது. கால்கள்தான் வலித்தன. ஆமை ஓடு சிறிதும் நசுங்கவில்லை.

ஆமை ஓட்டை வாயில் கவ்வியது அது. அருகில் இருந்த பெரிய பாறையின்மேல் ஏறியது. அங்கிருந்து அதைக் கீழே எறிந்தது.

கீழே வந்து பார்த்தது நரி. ஆமை ஓடு சிறிதும் உடைய வில்லை.

கடுங்கோபம் கொண்டது நரி. "ஆமையே! என்னிடமா



விளையாடுகிறாய்? உன்னைத் தீயில் போட்டு எரிக்கிறேன். அதன்பிறகு உன்னை உண்கிறேன்" என்று கத்தியது.

ஓட்டுக்குள் இருந்த ஆமை இதைக் கேட்டது. தனக்கு ஆபத்து வந்திருப்பதை உணர்ந்தது. பாதுகாப்பாகச் சிறிதளவு தலையை மட்டும் வெளியே நீட்டியது.

"நரியே! என்னைத் தீயில் தூக்கிப் போடு. பாறையின்மேல் வலிமை கொண்ட மட்டும் மோது. உருட்டி உருட்டி விளையாடு. என்னை எதுவேண்டுமானாலும் செய்.

உன்னை வணங்கிக் கேட்கிறேன். என்னை அங்கு மட்டும் எறிந்துவிடாதே. நான் மூச்சுத் திணறி இறந்து மிதப்பேன்" என்றது ஆமை.

ஆமையின் சூழ்ச்சி நரிக்குப் புரியவில்லை. அதை ஏமாற்ற

நினைத்தது நரி.

"ஆமையே! உன்னை எங்கு எறியவேண்டாம்? அதைச் சொல். உன்னை நான் அங்கு எறியமாட்டேன்" என்று இனிமையாகப் பேசியது நரி.

"தண்ணீரைக் கண்டாலே எனக்கு ஆகாது. ஏரியில் மட்டும் என்னை எறிந்துவிடாதே. ஏரிக்குள் மூழ்கி மூச்சுத் திணறி இறந்துவிடுவேன். என் உடல் நீரில் மிதக்கும்" நடுங்கிய குரலில் சொன்னது ஆமை.

"அப்படி வா வழிக்கு. இந்த எளிய வழி தெரியாமல் போயிற்றே. இப்பொழுதே உன்னை ஏரியில் எறிகிறேன். நீ இறந்து மிதந்ததும் உன்னைத் தின்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னது நரி.

ஆமையோ கெஞ்சியது. நரி சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆமையை உருட்டிச் சென்று ஏரிக்குள் போட்டது.

'ஆ! என் சூழ்ச்சி வெற்றி பெற்றது. எப்படியோ உயிர் பிழைத்தேன்' என்று நீந்திக்கொண்டே நீருக்குள் சென்றது ஆமை.

'ஆமை நீரில் மிதக்கும். அதை உண்டு பசியாறலாம்' என்று கரையிலேயே காத்திருந்தது நரி.

நீண்ட நேரம் ஆயிற்று. பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்தது நரி. ஆமை மிதக்கிறதா என்று ஏரியைச் சுற்றி வந்தது.

ஆமை நீருக்குமேல் தலையை நீட்டியது. கரையில் இருந்த நரியைப் பார்த்துக் குரல் கொடுத்தது.

"ஏ... முட்டாள் நரியே! ஆமைகள் நீரில் வாழ்கின்றன என்பது உனக்குத் தெரியாதா? நன்றாக ஏமாந்துவிட்டாய். நீ எவ்வளவு காலம் காத்திருந்தாலும் பயன் இல்லை. நான் இறந்து மிதக்க மாட்டேன். இனியாவது அறிவுடன் நடந்துகொள். இப்படி ஏமாந்து போகாதே. போய் வா" என்று கேலி செய்தது.

தான் ஏமாந்தது அப்பொழுதுதான் நரிக்குப் புரிந்தது. கோபத்தால் பற்களை நறநறவென்று கடித்தபடி அங்கிருந்து சென்றது.

★



கொலைகார ராணி

ராணியின் சதிச் செயல்களை முறியடிக்க வருகிறார், மாயாவி.

துடிப்பான படக்கதை!
படிக்கத் தவறாதீர்கள்!!

ஜனவரி 16-ந்தேதி
வெளிவருகிறது!

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவுல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக
32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

everest/96/HPL/94 tm

Apsara®
NON-DUST
ERASER

அப்ஸரா நான்-டஸ்ட் எரேஸர் அனைத்து தவறுகளை
சுத்தமாக மற்றும் தூய்மையாக அழிக்கிறது.
ஒருவித படிவங்களையோ அல்லது
கறைகளையோ ஏற்படுத்துவதில்லை. அழுக்கில்லை,
தொல்லையில்லை.

உங்கள் புத்தகங்களை
தூய்மைப்படுத்த தூய்மையான வழி

ஹிந்துஸ்தான் பென்சில்ஸ் லிமிடெட்